# பொறுமை கடலினும் பெரிது

## (நகைச்சுவை நாடகம்)

[முத்துப்பாக்கம் பெரிய எஜமான் ஓர் சுயகாரியப் புலி. அவர் தம் காரியத்தில் அதிக அக்கறையும் சுறுசுறுப்பும் உள்ளவர்; பிறர் காரியத்தில் மகா மந்தம்.

முத்துப்பாக்கம் 50 வீடுகள் உடைய கிராமம், நமது பெரிய எஜமான் ஊருக்கே பெரிய எஜமான். மிகப் பெரிய மிராசுதார். அவருக்கு 16 வயதுள்ள பிள்ளையாண்டான் உண்டு. அவரை ஊராரும், வீட்டுக் கணக்கர், ஆட்களும் சின்ன எஜமான் என்பார்கள். சின்ன எஜமான் தவிர 8, 5, 3, 1 வயதுள்ள 4 பசங்கள் உண்டு.

அதிகாலையில் வெளிக்குப் போய், பெரிய எஜமான் தம் வீடு நோக்கி மெதுவாக வந்து கொண்டிருக்கிறார். பரிதாப முகத்துடன் வீட்டுக் கணக்கர் பின் தொடர்கிறார்!]

**கணக்கன்:** எஜமான்! வீட்டில் என் மனைவியைப் பாம்பு கடித்து விட்டது.

**பெ.எ.:** (இந்த வார்த்தையைக் கேட்டதில் பதைபதைப்பு ஏதுமின்றி) சாந்தலிங்கம் நேற்று வட்டிப் பணம் கொடுத்தானா?

**கணக்கன்:** கொடுத்தான். வைத்யரை இட்டு வந்து காட்டினேன். சீக்கிரமாக, பெரிய எஜமானிடம் ஓடி, மருந்து கேட்டு வாங்கி வா என்று சொன்னார் வைத்யர்? ஓடி வந்தேன்.

**பெ.எ.:** அந்த முத்துசாமி என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறான்? எப்போதுதான் பணம் கொடுப்பான்?

**கணக்கன்:** இந்த மாதத்திலேயே கொடுத்து விடுவதாகச் சொன்னான். வந்துவிடும். வைத்தியரிடம் பாம்புக் கடி மருந்து இல்லையாம், உங்களுக்குச் செய்து கொடுத்தாராம் போன மாதம். அவசரமாகக் கொடுங்கள்.

**பெ.எ.:** விழுப்புரத்தில் இப்போது என்ன சினிமா நடக்கிறது?

**கணக்கன்:** இந்திப் படம். கொஞ்சம் அவசரமாகக் கொடுத்தால் தேவலை எஜமான்.

**பெ.எ.:** பொறுமை கடலினும் பெரிது.

**கணக்கன்:** இதுக்குக் கூடவா?

**பெ.எ.:** சின்னசாமியைக் கணக்குப்பிள்ளையாய் வைத்துக் கொள்ளச் சொல்லி, உன்னை நீக்கிவிடச் சொன்னார்; என்னிடம் தொந்தரவு பண்றாரே.

**கணக்கன்:** உங்க சித்தம். மருந்து இருக்குதல்ல உங்க கிட்ட?

[பெரிய எஜமான் தம் வீட்டுத் திண்ணையை அடைந்து விட்டார்.]

**பெ.எ.:** (உள்ளிருப்பவரை நோக்கி) பாயைக் கொண்டு வந்து போட்றா. தலைகாணி எடுத்து வா. காலெல்லாம் வலிக்குது.

**கணக்கன்:** உட்காரீங்களே. மருந்து அவசரமாச்சே எஜமான்.

[இதற்குள் பாய் போடுகிறான் ஓர் ஆள். தலையணை போடு கிறான் ஒருவன். கால் பிடிக்கிறான் ஒருவன்,]

**பெ.எ.:** எந்த வைத்யர்?

**கணக்கன்:** வேலுசாமி.

**பெ.எ.:** உம்... கையைப் பிடிடா.

[இதற்குள் கணக்கன் இந்தப் பாவியின் அட்டகாசம் பொறுக்க முடியாமல், பெரிய எஜமானின் வீட்டினுள் புகுந்து, அங்கு இருக்கும் சின்ன எஜமானிடம் கூறுகிறான்.]

**கணக்கன்:** சின்ன எஜமான், என் மனைவியைப் பாம்பு கடித்துவிட்டது. மருந்து இருக்குதாம் இங்கே. அவசரமா எடுத்துக் கொடுங்களேன்.

**சி.எ.:** அப்படியா, அப்பாவிடம் இருக்கு. கேட்டியா?

**கணக்:** அவர் எப்போது வர்ரது? அதற்குள் மனைவி ஒழிஞ்சி பூடுவாள் போலிருக்கே.

**சி.எ.:** (வெளியில் தன் தகப்பனை நோக்கி) அப்பா பெட்டிச் சாவி கொடுங்க. மருந்து வேணுமாங் கணக்கப் பிள்ளைக்கு.

**பெ.எ.:** காப்பி சாப்பிட்டாயா? என்ன பலகாரம் வச்சா அம்மா?

**சி.எ.:** தோசை சொஜ்ஜி! சாவி கொடுப்பா. பாம்பு கடிச்சிட்டதாமே கணக்கப்பிள்ளை வீட்டில்.

**கணக்:** உடனே மருந்து கொடுக்கணும் என்று வைத்தியர் பறக்கிறார்.

**பெ.எ.:** வரதராஜலு கடிதம் போட்டானே அதை எடு தம்பி.

[சின்ன எஜமான் எரிச்சலுடன் உள்ளே போகிறான்.]

**கணக்:** என்ன ஆச்சோ வீட்டில்! மருந்து இருக்குதல்ல எஜமான்?

[இதற்குள் ஓர் ஆள் தினசரி ஒன்றைக் கொண்டு வந்து கொடுக்க; அதை வாங்கி விரித்துக் கணக்கனை நோக்கி.]

**பெ.எ.:** உள்ளே கண்ணாடியை எடுத்து வா.

**கணக்:** வாசித்த பிறகுதான் எழுந்திருப்பிங்களோ! ஐயோ, அவசரமாச்சே எஜமான்!

**பெ.எ.:** பொறுமை கடலினும் பெரிது.

[விசிறிக் கொண்டிருந்த ஆள் ஓடிக் கண்ணாடியை எடுத்துக் கொடுக்க, பெரிய எஜமான் கண்ணாடியைத் துடைத்துப் போட்டுக் கொண்டு வாசிக்க ஆரம்பித்து விடுகிறார்.]

**கணக்:** சாவியைக் குடுங்களேன் எஜமான், எப்போ வாசிக்கிறது? எப்போ மருந்து கொடுக்கறது?

**பெ.எ.:** என்ன கடித்தது?

**கணக்:** பாம்பு.

[வாசிக்கிறார் பெரிய எஜமான்.]

**கணக்:** பாம்புங்க.

**பெ.எ.:** மருந்து இல்லியே.

[கணக்கர் கையுதறிக் கொண்டு வீட்டை நோக்கி ஓடுகிறார்.]

[கணக்கனின் வீட்டில் நடப்பது.]

**உறவினர்:** இப்படிக் கொண்டு வா மருந்தை! ஆர் வீட்டில்? அவசரமாகக் கொஞ்சம் தண்ணீர் கொண்டா. மருந்தெ வாயில் போட்டுத் தண்ணியை ஊத்தனும்.

[உடனிருக்கும் வைத்தியர் கையை நீட்டுகிறார்.]

**கணக்:** எங்கே? அந்தப் பாவி இந்நேரம் காத்திருக்க வைத்து மருந்து இல்லேண்ணு சொல்லிவிட்டானே!

[என்று கூறி, அங்கு வளர்த்தி வைத்திருக்கும் தன் மனைவியை நோக்கி]

தனபாக்கியம்!

[தனபாக்கியம் வாயில் நுரை தள்ளுகிறது.]

**வைத்தியர்:** நா... நா... நான்... பே... போய்... வ... வ... வ... வர்றேன்.

[போகிறார். கணக்கனும் உடன் போகிறான். இதற்குள் பெரிய எஜமானுக்குக் காலை அமுக்கிக் கொண்டிருக்கும் இரிசனின் தகப்பனாகிய ஓர் கிழவன், பெரிய எஜமானை நோக்கு கிறான்.]

**கிழவன்:** பேரன் ஊருக்குப் போறான் பாட்டி கூட! அரை ரூபா குடுங்க, குடுத்தனுப்ப வாணாங்களா எஜமான்?

**பெ.எ.:** தெக்கு வெளியிலே பயிரெல்லாம் எப்படியிருக்கு; பாத்தியா கிழவா?

**கிழவன்:** பாத்தேன். நல்லா இருக்கு. அதோ நிக்றாங்க! தோ வந்துட்றேன் இண்ணு ஓடியாந்தேன், குடுங்கே.

**பெ.எ.:** முதுகே உருட்டு.

**இரிசன்:** எங்க பெரியவரை அனுப்பனா தேவலை எஜமான்.

[இதற்குள் விசிறிக் கொண்டிருந்த குப்பனின் இடது கையில் தேள் கொட்டி விடுகிறது.]

**குப்பன்:** ஐயோ! (பார்க்கிறான்) தேள் கொட்டிப் புட்டுதுங்க.

**பெ.எ.:** இந்தப் பக்கம் வந்து விசிறு. பொறுடா.

[மறுபக்கம் வலியோடு விசிறுகிறான். சீனனை இருவர் தூக்கி வந்து பெரிய எஜமான் எதிரில் தெருவில் கிடத்துகிறார்கள்.]

**கொள்ளு:** வேலுப்பையன் இவனெ மண்டையை ஒடைச்சி புட்டு, ஊட்லே பூந்து பொண்டுவளே அடிச்சிபுட்டு, பணம் நகையெல்லாம் தூக்கிகிணு நொச்சிக் காட்டுக்கு ஓடிப்புட்டான். போலீஸுக்கு ஆளெ உடுங்க. ஆக வேண்டியதே பாருங்க எஜமான்.

**பெ.எ.:** அங்காரு?

**மனைவி கனகம்:** (உள்ளேயிருந்து வந்து) ஏன்?

[பெரிய எஜமான் பேப்பர் வாசிக்கிறார்.]

**கொள்ளு:** வேலுப்பையன் ஓடிப்புடுவாங்க.

**கிழவன்:** கொஞ்சம் தயவு பண்ணுங்க.

[காயப்பட்டுக் கிடக்கும் சீனன் தத்துக் குத்தலான நிலையில் இருக்கிறான்.]

**சீனன்:** என்னெ காப்பாத்துங்க. அவனெ புடிக்க ஏற்பாடு பண்ணுங்க.

**வைத்:** "ம."

[மருந்து என்று சொல்ல "ம" எழுத்தில் அகப்பட்டுக் கொண்டு அவஸ்தையடைகிறார். தெற்று வாயராகிய வைத்தியர்]

**கனகம்:** ஏன் கூப்பிட்டிங்க?

**பெ.எ.** இதோ வந்துவிட்டேன்.

**கணக்:** என் மனைவிக்கு உயிர் போவுதுங்களே, எழுந்திருங் களேன்.

**பெ.எ.:** பொறுமை கடலினும் பெரிது.

[பேப்பர் வாசிக்கிறார். உற்றுக் கவனித்தபடி, சுப்ரமண்ய குருக்கள் வருகிறார்.]

**சுப்ர:** வரணும். (இடது கையைத் தூக்கி ஆசீர்வதித்தபடி.)

**பெ.எ.:** வாங்க. சாமி. உக்காருங்க.

**சுப்ர:** உட்கார்ரதுக்கில்லே. கொஞ்சம் அவசரமா வந்தேன். நம்ம ஆத்லே இன்னிக்கு நம்ம மருமான் ஊருக்குப் போறது. அவன் ஆம்படையாளெ கூட்டினு.

**பெ.எ.** ராமையா குருக்கள் சௌக்யமா இருக்காரா?

**சுப்ர:** இருக்கார். மருமான் வந்தா செலவு இருக்காதா? 10 ரூபாய் கொடுங்க. நிக்க வச்சிட்டு வந்தேன்.

**பெ.எ.:** கடுதாசி கிடுதாசி போட்டாரா?

**சுப்ர:** போட்டார். நான் அப்புறம் வந்து சொல்றேன். என்னை அனுப்புங்க.

[பெரிய எஜமான் பேப்பர் பார்க்கிறார் பழையபடி.]

**சுப்ர:** என்னை அனுப்புங்க. சாவகாசமா பாருங்களேன் பேப்பரை.

**பெ.எ.:** ஒங்கமேலே ஒரு பிராது.

**சுப்ர:** என்னா அது?

**பெ.எ.:** (பேப்பர் பார்க்கிறார்)

**கணக்:** ஆபத்துங்க. (பரிதாபமாக)

**கிழவன்:** அரை ரூபாய்தானுங்க. (பரிதாபமாக)

**இரிசன்:** எங்க பெரியவரே அனுப்புங்க. (பரிதாபமாக)

**குப்பன்:** தேளுங்க. (பரிதாபமாக)

**கொள்ளு:** திருட்டுப் பையன். (பரிதாபமாக)

**சுப்ர:** 10 ரூபாய். (கையைப் பிசைந்தபடி.)

**சீனன்:** ஐயோண்ணு போவுது உயிர்.

[என்றிவ்வாறு அவரவர் முணுமுணுத்துக் கொண்டிருக்கிறார்கள் வாய் ஓயாமல்.]

**மனைவி:** (பெரிய எஜமானை நோக்கி) ஏன் கூப்புட்டிங்க?

**பெ.எ.:** கலியாண விஷயம் என்ன?

**கனகம்:** அவன் கலியாணம் இப்பவாண்டாம் இண்றான். சம்பாதனைக்கு வழிதேடிய பின்னேதான் செய்துக்குவேன் இண்ணு சொல்றான்.

**பெ.எ.:** (கணக்கனை நோக்கி) நம்ம பையன் பெரியவனாப் போயிட்டான்; கலியாணம் பண்ணணுமா இல்லையா?

**கணக்:** ஆபத்துங்க.

பெ.எ.: (திடுக்கிட்டு, நிதானித்து) ஓகோ உன் சேதியா? அது இருக்கட்டும். கண்ணுக்குப் பிடிச்ச பொண்ணா பார்த்தா போறது. (கிழவனை நோக்கி) ஏன் கிழவா பொண்ணா நமக்கு அகப்படாது.

கிழவன்: அரை ரூபாய் தானுங்க.

பெ.எ.: (திடுக்கிட்டு, நிதான்த்து) ஓகோ — நல்ல இடத்துப் பெண் ஒண்ணு இருக்கு, உங்க அப்பாவை அனுப்பிக் கேக்கலாமிண்ணு நினைக்கிறேன். (இரிசனை நோக்கி) ஏன்?

இரிசன்: எங்க பெரியவரே அனுப்புங்க.

பெ.எ.: என்னடா மடப்பயலே.

இரிசன்: அவசரங்க. பெரியவரே அனுப்புங்க.

பெ.எ.: ஓகோ.. ஏண்டி கனகம்? ஜமீன்தார் மகள் எப்படி? படிச்ச பொண்ணு; நல்ல அழகு. (குப்பனை நோக்கி) ஏன்?

குப்பன்: தேளுங்க.

பெ.எ.: தேளா! (நிதானித்து) ஓகோ உன் சங்கதியோ? (மனைவியை நோக்கி) ஜமீன்தார் அந்தஸ்தில் குறைஞ்சவரா கனகம்? (கொள்ளுவை நோக்கி) அவர் அந்தஸ்து எப்படி?

கொள்ளு: திருட்டுப் பையன்.

குப்பன்: ஓகோ அதுவா?

பெ.எ.: அடடா, என்னடா அப்படி சொல்லிட்டியே ஜமீன்தாரே.

கொள்ளு: திருட்டுப் பையன் ஓடிடுவாங்க.

கனகம்: எங்க அண்ணன் மவ நல்லா இல்லியா? அவளே ஏங் கட்டப்படாது? நாங்க என்னா பொற மாட்டமா? பரியம் ஏதாவது குடுங்க. ஏன் குருக்களே?

சுப்ர: பத்து ரூபாய்.

கனகம்: அட, ஒன்னே பாடையிலே வைக்க. குருக்களா நீ? மூஞ்சை பாரு, திருட்டுப் பையனாட்டம்.

சுப்ர: மருமானை ஊருக்கு அனுப்பணும். 10 ரூபாய் தேவையிண்ணேன்.

கனகம்: ஓகோ! (பெரிய எஜமானை நோக்கி) நீங்க கட்டாட்டிப் போனா எங்கூட்டிலே சோறு கொதிக்காமே பூடாது. கிராக்கி இல் லாமல் இல்லே. (இச்சமயம் சீனன் எழுந்து விழுகிறான். அவனைக் காட்டி) சீனனுக்குத் தெரியும் எங்க வீட்டு நெலவரம்.

சீனன்: ஐயோண்ணு போவுது உயிரு.

கனகம்: ஏங் குடும்பமா?

சீனன்: போலீஸுக்குச் சொல்லுங்க; மண்டை ஒடஞ்சி போச்சிங்க.

பெ.எ.: உனக்கென்ன செய்யணும்ண்றே?

கிழவன்: அரை ரூபாய்! நாழி ஆவுதுங்க.

பெ.எ.: சரி, ஒனக்கு?

கொள்ளு: வேலு ஓடிப்புடுவானுங்க. சீக்கிரம் போலீஸுக்கு ஆள் அனுப்பணுங்க.

பெ.எ.: சரி நீ?

குப்பன்: தேள் கொட்டிபுட்டது; போறேனுங்க! மருந்து இருந்தா போடுங்க.

பெ.எ.: சரி. நீர்?

வைத்: "ம"

[என்ற எழுத்தைத் தாண்டி மருந்து என்று கூறி முடித்து, பெட்டியில் என்பதற்கு "பெ" என்ற எழுத்தில் மாட்டிக்கொண்டு, அவஸ்தைப் பட ஆரம்பிக்கிறார்.]

கணக்: மருந்து. பெட்டியில் இருக்கிறதாமே! அவசரம் எஜமான்!

பெ.எ.: சரி, நீ?

இரிசன்: எங்க அப்பாவை அனுப்புங்க அவசரமா.

பெ.எ.: சரி, நீங்க?

சுப்ர: அதான். 10 ரூபாய் கேட்டேனே.

பெ.எ.: சரி.

[உள்ளே போகிறார். அனைவரும் ஆவலாகக் காத்திருக்கிறார்கள். பெரிய எஜமான் சற்று நேரம் சென்ற பின், ஒரு பொட்டணத்துடன் வெளியே வருகிறார். கணக்கர் கை நீட்டுகிறார் ஆவலுடன். பொட்டணத்தைக் கணக்கனிடம் கொடுத்துக் கூறுகிறார்.]

பெ.எ.: இந்தப் பொட்டணத்தைக் கோயில்லே குருக்கள் இருப்பார். அவர்கிட்ட கொடுத்துட்டு அவசரமா ஓடியா.

[பொட்டணத்தை வாங்காமல் தலை தாழ்த்தி நிற்கிறான்.]

கணக்: ஐயோ எனக்கிண்ணு நெனைச்சேன்.

பெ.எ.: (திண்ணையில் அதை வைத்து) அவசரமா கொடுத்துட்டு ஓடியா.

[உள்ளே போகிறார். சிறிது நேரம் சென்று எட்டணாவுடன் வெளியில் வந்து]

பெ.எ.: இந்தா (அரை ரூபாயைக் காட்டி) யாரங்கெ?

கிழவன்: நான்தாங்க. (ஆவலாகக் கைநீட்டி நெருங்குகிறான்.)

**பெ.எ.:** (தேள் கொட்டப்பட்ட குப்பனை நோக்கி) குப்பா, இதைக் கொண்டு போய் ராமசாமி பிள்ளை கேட்டார், நல்லா நெய்யா வாங்கிக் கொடுத்துட்டு ஓடியா.

**கிழவன்:** எனக்கு எஜமான்? என்னை அனுப்புங்க.

**குப்பன்:** கொட்டு வாயில் ரொம்ப கடுக்குதுங்க.

**பெ.எ.:** சரி. நான் அனுப்புகிறேன். (உள்ளே போகிறார், சற்று நேரம் சென்று ஒரு நோட்டோடு வெளி வருகிறார்.)

**சுப்ர:** ரொம்ப உபகாரமா போச்சு (என்று கூறிக் கையை நீட்டுகிறார்.)

**பெ.எ.:** நாளைக்கு ஒரு விசேஷம். அதற்குச் சில்லறை வேணும். வைத்யரே மாத்தி வாரீரா?... அப்புறம் ஆகட்டும்... இருங்க. இதோ வந்துட்டேன். (சிறிது நேரம் சென்று குப்பனை) பல்லு குச்சி நல்ல வேப்பங்குச்சா பாத்து ஒடிச்சிகினு வா. இதோ சாப்பிட்டு வர்றேன்.

[உள்ளே போகிறார். இதற்குள் ஒரு பையன் ஓடி வந்து கணக்கனைப் பார்த்து]

**பையன்:** ஒங்க பொண்டாட்டி செத்துப்புட்டாங்க.

**கணக்:** பூட்டாளா, ஐயோ!

**பெ.எ.:** பூஜை முடிச்சிபுட்டு வர்ரேன்.

**கணக்:** அட காமாட்டி. (என்று கூறி ஓடுகிறான்)

**குருக்கள்:** சரியா போச்சு! (போகிறார்)

[மற்றவர்களும் முணுமுணுத்துக் கொண்டும் திட்டிக் கொண்டும் போகிறார்கள்.]

## மறுநாள்

[பெரிய எஜமான் திண்ணையில் உட்கார்ந்திருக்க, மனைவி எதிரில் நிற்கிறாள்.]

**பெ.எ.:** நேற்றே தெரியும்? அவன் ஒரு மாதிரியிருந்தான். காசிமாலை இருக்கா? அதையும் எடுத்துக்கினு பூட்டானா?

**கனகம்:** அதையுந்தான்.

**பெ.எ.:** அட பாவி; எங்கே போயிருப்பான்? மொத்தம் பதினாயிர ரூபாய் நகை இருக்கும். ரொக்கம் ஆயிரம் அல்லாத்தையும் எடுத்துக் கினு போயிட்டானே. பணம் நகை போகட்டும். பிள்ளை இருக்கிற இடம் தெரிந்தா போதும்.

**கனகம்:** அதுதானே நான் நினைக்கிறேன். ராத்ரி கிளம்பி நேரே ரயிலுக்குப் போயிட்டான் இருட்டில்! காலை 3 மணி ரயில் ஒத்துக்கிச்சி. எங்கியோ பூட்டான்.

[தந்தியுடன் ஒரு பியூன் சைக்கிளில் வருகிறான்.]

**பெ.எ.:** (தந்தியைக் கொடுக்க அதை வாசிக்கிறார்) இப்ப என்னா மணி 3 இருக்கும். ஐயோ! இன்னும் ஒரு மணி நேரந்தானே இருக்குது. அவசரமா ரயிலுக்குப் போகணுமே; ஐயையோ!

**கனகம்:** என்னா சங்கதி? கேட்கறேனே.

**பெ.எ.:** சென்னையிலே நாளை காலையில் கப்பல் ஏறப் போறானாம் பையன். மோரிசுக்குப் போக. அதுக்குள்ளே நாம் வந்தாதாம் பார்க்க முடியுமாம்! கிளம்பு. இன்னும் ஒரு மணி நேரந்தான்! 6 மைல் இருக்கு ரயில் ஸ்டேஷனுக்கு; கிளம்பு!

[கனகம் உள்ளே ஓடி உடுத்துகிறாள். மூட்டை கட்டுகிறாள். பிள்ளைகளுக்கு உடுத்துகிறாள். வெகு பரபரப்புடன் பெரிய எஜமான் வெளியில் ஓடுகிறார். கணக்குப் பிள்ளையின் வீட்டெதிரில் நின்று]

**பெ.எ.:** கணக்குப் பிள்ளை ஓடியா.

[கணக்குப் பிள்ளை வருகிறான்.]

**பெ.எ.:** ரயிலுக்கு அவசரமா போகணும் வண்டிக்காரனைக் கூப்பிடு. ஓடு.

**கணக்:** நாளைக்குத்தான் மூணாநாள். கொஞ்சம் கிரியை விசேஷமாக நடத்த யோசனை.

**பெ.எ.:** நான் என்ன சொல்றேன்! அவசரம் ஓடு.

**கணக்:** பொறுமை கடலினும் பெரிது.

**பெ.எ.:** என்னா மடயா சீக்கிரம் வண்டி.

**கணக்:** என்ன விசேஷம்?

**பெ.எ.:** ஐயோ! சோம்பேறி நாயே.

[என்று கூறி வண்டிக்காரனாகிய குப்பனின் வீட்டிற்கு ஓடி, எதிரில் நின்று]

குப்பா! ஓடியா வண்டி கட்டு.

**குப்பன்:** (எதிரில் நின்று) தோ வந்துட்டேன், இந்தக் கையைத் தூக்க முடியலிங்க. தேள் கொட்டிச்சி பாருங்க. என்னாங்க...

**பெ.எ.:** கதை சொல்லி மறுக்க நாழியில்லை... அவசரம் ஓடியா. வண்டியைக் கட்டு! வா.

**குப்பன்:** (தன் வீட்டுக்காரியை நோக்கி) அங்காரு? வெற்றிலைப் பையை எடு. தோ வர்ரேன் போங்க.

**பெ.எ.:** என்ன வர்ரியா? புறப்படு. ஓடு சொல்றேனே.

**குப்பன்:** பொறுமை, கடல் இருக்குது பாருங்க. அதுக்கீடு பெரிசுங்க.

**பெ.எ.:** அடே வாடா சீக்கிரம்.

**குப்பன்:** சரி.

[நகருகிறான்; பெரிய எஜமான் அவனைத் தள்ளிக் கொண்டு ஓடுகிறார்.]

**பெ.எ.:** போய் வண்டியைக் கட்டு. இதோ கொள்ளுப் பையனைக் கூட்டிகினு ஓடியாரேன். ஓடு.

[அவசரமாக ஓடுகிறார்.]

[பெரிய எஜமான் வீட்டின் எதிரில் கட்டை வண்டி நிற்கிறது. அதன் கூண்டு தனியாக ஒரு புறம் இருக்கிறது. அதைப் பழுது பார்க்க ஆரம்பிக்கிறான் குப்பன்! பெரிய எஜமான், கொள்ளு, சீனன், கணக்கன் வருகிறார்கள்.]

**பெ.எ.:** கணக்கப்பிள்ளை, புஸ்தகத்தேயெல்லாம் எடுத்து உன் அறையிலே வைச்சிக்கோ. நான் வர இரண்டு நாள் ஆவும். என்னடா செய்யறே குப்பா? போதும் பழுது பார்த்தது; கூண்டே எடுத்து மூடு சீக்கிரம்.

**குப்பன்:** சரிங்க.

[கூண்டைத் தூக்கி வருகிறான். பெரிய எஜமான் உள்ளே போகிறார்.]

**பெ.எ.:** போக வேண்டிய மூட்டை, முடிச்சி, பொட்டி, போழை யெல்லாம் ஒரு பக்கம் எடுத்துவை. கனகம், அப்றம் உடுத்தலாம்; சீக்கிரம் நாழி ஆவுது.

[இதற்குள் கொல்லைப் புறமிருந்து கழுதை ஒன்று வீட்டுக்குள் நுழைந்து விடுகிறது. கூடத்தில் எடுத்துப் போக வேண்டிய சாமான்களைக் கனகம் கொண்டு வைக்கிறாள், இடுப்பில் ஒரு பிள்ளையைச் சுமந்தபடி ஒவ்வொன்றாக.]

அவையாவன:

வேடுகட்டிய ஒரு தவலை, ஒரு மூட்டை, ஒரு கூஜா செம்பு, சர்க்கரை சீசா, சோப்பு பெட்டி, பாலாடை, சீப்பு முதலியன அடங்கிய ஒரு சிறு தகரப்பெட்டி, பிள்ளைத்தடுக்கு, மெத்தைச் சுருணை,

தலையணைக் கட்டு, பலகாரம் அடங்கிய ஒரு டின், வெற்றிலை பாக்குப் பெட்டி, செருப்பு ஒரு ஜோடி, அப்போது கட்டிக் கொள்ள வேண்டிய புடவை, அப்போது போட்டுக் கொள்ள வேண்டிய நகை, ஒட்டியாணம், கண்ணாடி, பிள்ளைகளின் உடைகள், நகைகள்.

**பெ.எ.:** (டிரங்கில் உடுப்பு அடுக்கிக் கொண்டே) கணக்கப் பிள்ளே.

**கண:** இதோ புஸ்தகங்களை எடுத்து வைக்கிறேன்.

**பெ.எ.:** ஆரையாவது அனுப்பு! கொல்லைக் கதவை சாத்தச் சொல்லு... நானே சாத்தி விடுகிறேன். ஓடிச் சாத்துகிறார். (கனகத்தை நோக்கி) *ஆச்சா?* நாழிகை ஆகிறது. சாமான்களையெல்லாம் வண்டியிலே எடுத்து வை.

[வெளியில் போகிறார். வண்டியில் கூண்டு மூடுகிறவனைப் பார்த்து]

"போதும்டா"

[கூண்டை மேலோடு வைத்து விடுகிறான்.]

**குப்பன்:** சரி.

**பெ.எ.:** வண்டியைக் கட்டு; மாட்டே ஓட்டிவா.

[குப்பன் கொல்லையை நோக்கிப் போகிறான்.]

**பெ.எ.:** (உள்ளே தலைவாரிக் கொண்டிருக்கும் கனகத்தை ஓர் அறை அறைந்து) முண்டே! நாழிகை ஆகிறது.

[என்று கூறி, டிரங்கு தடுக்கக் கீழே விழுகிறார். எழுந்து சாமான்களை எடுத்துக் கொண்டு, வண்டியை நோக்கி ஓடி, அதில் வைத்து, அவசரமாகத் திரும்பி, மற்றும் சாமான்களை எடுத்து வருவதற்குள், கழுதை ஓர் அறையில் புகுந்து விடுகிறது. கனகமும் சாமான்களை வண்டியில் கொண்டு வந்து வைக்கிறாள்.]

**பெ.எ.:** தவலை வேண்டாம்.

[என்று கூறி அதை அறையில் வைக்க நுழைகிறார். கனகம் அவசரமாகக் கதவை இழுத்துச் சாத்திப் பூட்டி விடுகிறாள். அதே அறையில் கழுதையும் இருந்ததால் அதனிடம் பெரிய எஜமான் உதைபடுகிறதால் ஏற்படும் கதறல் வீட்டைப் பிளக்கிறது.]

**பெ.எ.:** ஐயையோ! ஐயையோ!

[கனகம் கதவைத் திறக்க, பெரிய எஜமான் பல் உடைந்தபடி வெளியே வந்து விழுகிறார். அறையில் கனகம் நுழைகிறாள். இது பெரிய எஜமானுக்குத் தெரியாது. அவசரமாக எழுந்து கதவைச் சாத்துகிறார். கழுதை கனகத்தை உதைக்கிறது.]

**கனகம்:** ஐயையோ! ஐயையோ!

[பெரிய எஜமான் கதவைத் திறக்கிறார். மண்டை உடைந்தபடி கனகம் வெளியே வந்து விழுகிறாள். கழுதை இருப்பது தெரிகிறது.

**பெ.எ.:** அதைரியப்படாதே, எழுந்திரு. வண்டியிலேறு, (கழுதையை நோக்கி) உஸ். சீ. (தமக்குள்) உள்ளே கிடந்து ஒழி. (கதவைச் சாத்துகிறார்.)

[அடுத்த அறையில் தம் 8 வயதுப் பையன் என்னமோ எடுக்கிறான். அது தெரியாமல் பூட்டி விடுகிறார். 8 வயது பிள்ளை தவிர மற்றப் பிள்ளைகள் சாமான்கள் வண்டியில் ஏற்றுமதி நடந்து விட்டது.]

**பெ.எ.:** கணக்கப்பிள்ளை, பத்திரம், நான் மூன்று நாளில் வந்து விடுகிறேன்.

[வண்டியில் ஏற, கூண்டு சாய்கிறது.]

**குப்பன்:** பயப்படாதிங்க. இதோ சரிப்படுத்தி விடுகிறேன்.

[என்று இறங்க முயலுகிறான்.]

**பெ.எ.:** கூண்டு இல்லாவிட்டால் பாதகமில்லை. ஓட்டு!

[கூண்டு இல்லாத வண்டி ஓடுகிறது.]

**கனகம்:** எல்லாச் சாமான்களும் சரியாய் எடுத்து வைச்சாச்சோ, என்னமோ?

**பெ.எ.:** வச்சாச்சி; ரயில் அகப்படுமா குப்பா?

**குப்பன்:** ஆகா நல்லா.

**பெ.எ.:** ஓட்டு வண்டியை.

**குப்பன்:** ஏய்...

[மாட்டை அபாரமாக அடித்து விரட்டுகிறான். வண்டியில் கடையாணி இல்லாததால், இரு சக்கரமும் ஏக காலத்தில் கழலப் பார் நிலத்தில் உட்கார்ந்து விடுகிறது. பிள்ளைகள் கீழே உருளுகின்றனர். கனகம் விழுந்து எழுந்து பிள்ளைகளைக் காப்பாற்றுகிறாள். 8 வயதுள்ள பிள்ளை பெயர் ராமு.]

**கனகம்:** ஐயோ! ராமு எங்கே?

[இதற்குள் எதிரில் ஒரு கூண்டு வண்டி வருகிறது. பெ.எ. கைகாட்டி நிறுத்துகிறார். சாமான்கள் ஏற்றப்படுகின்றன. பிள்ளைகள் ஏற்றப்படுகிறார்கள்.]

**கனகம்:** ராமுவைக் காணோமே?

[என்று கூவுகிறாள்.]

**பெ.எ.:** மணி ஆகிவிட்டது. ஓட்டு வண்டியை.

[என்று கத்துகிறார்.]

**குப்பன்:** பொறுமை கடலினும் பெரிது.

[என்று கத்துகிறான். வண்டி ஓடுகிறது.]

**கனகம்:** ராமுவைக் காணோமே, ஐயோ.

**பெ.எ.:** ராமு எங்கே? (இறங்கி, வண்டி வந்த வழி நோக்கி ஓடுகிறார். திரும்பி ஓடிவந்து) வீட்டிலேயே தங்கிவிட்டானோ?

**கனகம்:** அப்படித்தான் இருக்கும்.

[பெ.எ. வீட்டை நோக்கி ஓடுகிறார். திரும்பி ஓடிவந்து.]

**பெ.எ.:** வீட்டுச் சாவி எங்கே?

**கனகம்:** என்னிடம் கொடுக்கலியே.

**பெ.எ.:** போடி முண்டே (என்று ஓடுகிறார். திரும்பி ஓடிவந்து) கனகம்! கணக்கப் பிள்ளையிடம் இருக்குமா சாவி!

**கனகம்:** இருக்கும்.

**பெ.எ.:** வண்டியை ஓட்டு. டிக்கட்டு வாங்கிவிடு. நான் எப்படியாவது வந்து விடுகிறேன். ஆம்பளை!

**கனகம்:** சரி.

[வண்டி ஓடுகிறது. பெரிய எஜமான் ஓடுகிறார் வீட்டை நோக்கி. கணக்கப்பிள்ளை வீடு சாத்தியிருக்கிறது. பெரிய எஜமான் கதவைத் தட்டுகிறார் விரைவாக.]

**பெ.எ.:** கணக்குப்பிள்ளை!

**கணக்:** (உள்ளேயிருந்தபடி) யாரடா அவன்?

**பெ.எ.:** நான்தான் பெரிய எஜமான்!

**கணக்:** ஏன் என்ன சங்கதி. நீங்களா? ரயில் அகப்படலியா?

**பெ.எ.:** சாவி கொடு.

**கணக்:** எந்தச் சாவி?

**பெ.எ.:** வீட்டுச் சாவி?

**கணக்:** ஏன்?

**பெ.எ.:** பையனை வீட்டிலே விட்டுச் சாத்திவிட்டுப் பூட்டேன், அவசரத்தில்!

**கணக்:** அடடா! அதுதான் அறையில் சத்தம் கேட்டதோ. பையனை அறையில் வுட்டுச் சாத்திவிட்டிங்க.

**பெ.எ.:** ஐயையோ! என்ன பண்ணுவேன், அடடா. வாயேன் வெளியே. என்ன பண்றே?

**கணக்:** இதோ வந்துட்டேன்!

**பெ.எ.:** சாவியாவது குடேன்.

**கணக்:** இதோ வந்துட்டேன்.

**பெ.எ.:** என்னடா பண்றே பாவி.

**கணக்:** பொறுமை கடலினும் பெரிசு. எண்ணெய்த் தலையோடு இருக்கேன். இதோ வந்துவிட்டேன்.

**பெ.எ.:** சாவியைக் கொடுத்தனுப்பேன்.

**கணக்:** வீட்டில் யாரும் இல்லை.

**பெ.எ.:** ஜன்னலால் போடு.

**கணக்:** எதை?

**பெ.எ.:** அறைக்கதவு சாவியை.

**கணக்:** என்னிடம் ஏது?

**பெ.எ.:** பின் எங்கே?

**கணக்:** எங்கே வச்சிங்க?

**பெ.எ.:** வீட்டுக் கதவு சாவி கொடு.

**கணக்:** அறையில்தானே பிள்ளையிருக்கான்.

**பெ.எ.:** (கதவை உடைக்கிறார். கதவு உடைந்து விடுகிறது. எதிரில் நிற்கிறான் கணக்கன்.)

சாவி கொடு.

**கணக்:** பொறுமை கடலினும் பெரிது. இந்தாங்க சாவி.

[சாவியை வாங்கிக் கொண்டு வீட்டை நோக்கி ஓடுகிறார் பெரிய எஜமான்.]

[அவசரமாக வீட்டைத் திறக்கிறார், கொத்துச் சாவியிலிருக்கும் வேறு சாவியைப் போட்டு! பிறகு, சரியான சாவியால் திறந்து உள்ளே ஓடுகிறார். அறைக்கதவு சாவியைத் தேடுகிறார். அகப்படவில்லை. அங்கிருந்த கடப்பாறையால் அறைக் கதவை உடைக்கிறார். கழுதை வெளியே ஓடி வருகிறது.]

[பிறகு இரண்டாவது அறைக் கதவை உடைக்கிறார். பிள்ளை படுத்துத் தூங்குகிறான். அள்ளியெடுக்கிறார்.]

**பெ.எ.:** ஓடியா தம்பி. தெரியாமல் சாத்திவிட்டேன். (இழுத்துக் கொண்டு ஓடிவிடுகிறார் வீட்டைச் சாத்தாமல்.)

[சிறிது நேரம் செல்ல]

பெ.எ.: அடடா! வீட்டைப் பூட்டவில்லை. போ தம்பி ஸ்டேஷனுக்கு. இதோ வந்துட்றேன்.

[வீட்டை நோக்கி ஓடுகிறார். பையன் சோகமாக அங்கு உட்கார்ந்து விடுகிறான். திரும்பி பெ.எ. ஓடி வருகிறார். பையன் சோர்ந்து உட்கார்ந்திருப்பதைப் பார்த்து, அவனைத் தூக்கிக் கொண்டு ஓடுகிறார்.]

[எதிரில் கனகம் வண்டி ஓடி வருகிறது.]

பெ.எ.: என்ன சங்கதி? ஏன்?

கனகம்: பணம் என்னிடம் கொடுக்கவில்லையே டிக்கட் வாங்க!

பெ.எ.: சரி சரி. என்னிடம் இருக்கிறது.

[வண்டியில் அனைவரும் ஏறிக் கொள்ள, வண்டி ஸ்டேஷனை நோக்கி ஓடுகிறது. ரயில் ஸ்டேஷனை அடைகிறது.]

பெ.எ.: (புக்கிங் கிளார்க்கை நோக்கி) டிக்கட் கொடுங்க.

கிளார்க்கு: எந்த ஊருக்கு?

பெ.எ.: பட்டணம் (பையில் கையை விடுகிறார்.)

கிளார்க்கு: எத்தனை?

பெ.எ.: மூணரை. சீக்கிரம் கொடுங்க.

கிளார்க்கு: பணம்?

பெ.எ.: அடடா, இதோ வந்துட்டேன். (தம் மனைவியை நோக்கி) மணிபர்ஸ் எங்கே?

கனகம்: யாரைக் கேட்கிறீங்க?

பெ.எ.: எங்கே என் டிரங்கு?

கனகம்: உங்கள் டிரங்கை எடுத்து வைக்கலே.

பெ.எ.: ஐயையோ! (குப்பனை நோக்கி) என்ன பண்ணுவேன்?

[ரயில் போய் விட்டது.]